# 59. ஆரணத்திறுதி

## ஆசிரியத்தாழிசை

**ஆரணத் திறுதிதா னகிலமுஞ் சீவனும்**
**தாரணப் பரமதும் பொய்யெனச் சாற்றிடுங்**
**காரணம் போதமங் கலின்மறைந் திடுதலால்.**

*ஆரணத்து இறுதிதான் அகிலமும் சீவனும்*
*தாரணப் பரம் அதும் பொய் எனச் சாற்றிடும்*
*காரணம் போதமங்கலில் மறைந்திடுதலால்.*

அறிவுக் குறைவினால் காரணம் புலப்படாமல் மறைந்து விடுவதால், வேதாந்தம் உலகமும் உயிரும் நிலையான இறையும் பொய் எனக் கூறிடும். 1

**அகிலமோ பாசமென் றாமதிச் சீவனோ**
**பகையுயிர்த் தத்துவம் பரமுருத் தேவராம்**
**யுகளமா வெண்ணிடி னொடுக்கமெய் தாதரோ.**

*அகிலமோ பாசம் என்றுஆம் மதிச் சீவனோ*
*பகை உயிர்த் தத்துவம் பரம் உருத் தேவர் ஆம்*
*உகளமா எண்ணிடின் ஒடுக்கம் எய்தாது அரோ.*

உலகம் பாசம் என்று ஆகும்; சித்து ஆன உயிரோ அதற்கு விரோதமான உயிர்த் தத்துவம். பரத்தின் உரு இறை ஆகும் என இரண்டாக (பேதமாக) நினைக்கின் இவற்றுள் ஒடுக்கம் என்பது நிகழாது. 2

**நிசசிவந் தானென நினைக்கினும் விகற்பமாம்**
**அசிபதத் தைக்கிய மிரண்டுமின் றொன்றுமின்**
**றுசிதநற் றேனுணீ யொப்பநின் றுணர்தியால்.**

*நிச சிவம் தான் என நினைக்கினும் விகற்பம் ஆம்*
*அசிபதத்து ஐக்கியம் இரண்டும் இன்று ஒன்றும் இன்று*
*உசித நல்தேன் உண்ஈ ஒப்ப நின்று உணர்தி ஆல்.*

உண்மைச் சிவத்தைத் தான் என நினைத்தாலும் அது வேறுபாடான கருத்தாகும். அசி என்ற சொல்லினால் பெறப்படும்

சீவான்மா, பரமான்மா ஐக்கியம் என்பது இரண்டும் இல்லை, ஒன்றும் இல்லை என்பதை உணர்த்தும். இந்த ஐக்கியத்தைத் தகுந்த நல்ல தேனை உண்ணும் தேனீ ஒப்பப் பேரின்பத்தை அனுபவித்து அறிவாயாக. 3

**நினைவிருந் தாலுறா துயர்நிரு விகற்பமால்**
**நினைவிருந் தாலுறா துயர்நிறை வுடைச்சுகம்**
**நினைவிருந் தான்மலப் பிராணனா நிகழுமே.**

நினைவு இருந்தால் உறாது உயர்நிருவிகற்பம் ஆல்
நினைவு இருந்தால் உறாது உயர் நிறைவு உடைச்சுகம்
நினைவு இருந்தால் மலப் பிராணனா நிகழுமே.

உயர்ந்த நிருவிகற்பம் என்னும் சமாதிநிலை தற்போதம் இருந்தால் உண்டாகாது; மேலான பூரண இன்பம் தற்போதம் இருந்தால் நிகழாது; தற்போதம் இருந்தால் மலத்துடன் கூடிய உயிராக நிகழும். 4

**நினைவிலா நிலையிலே நிஜவிழி விளங்கிடும்**
**நினைவிலா நிலையிலே யுயிர்பரம் விளங்கிடும்**
**நினைவிலா நிலையிலே நினைவிலா நினைவரோ.**

நினைவு இலா நிலையிலே நிஜ விழி விளங்கிடும்
நினைவு இலா நிலையிலே உயிர் பரம் விளங்கிடும்
நினைவு இலா நிலையிலே நினைவுஇலா நினைவர் ஓ.

நினைவு இல்லாத நிலையில் உண்மைக்கண் எனும் ஞானக்கண் விளங்கிடும்; நினைவு அற்ற நிலையில் உயிரும் இறைவனும் விளங்கிடும்; நினைவு இல்லா நிலையில் நினைவில்லா நினைவர் ஆக விளங்குவர். 5

**நினைவிறந் தாலங னிருவிகற் பஞ்சகம்**
**நினைவிறந் தாலங னிருவிகற் பம்பசு**
**நினைவிறந் தாலங னிருவிகற் பம்பரம்.**

நினைவு இறந்தால் அஙன் நிருவிகற்பம் சகம்
நினைவு இறந்தால் அஙன் நிருவிகற்பம் பசு
நினைவு இறந்தால் அஙன் நிருவிகற்பம் பரம்.

நினைவு இல்லாமல் போனால் அந்நிலையில் நிருவிகற்பம் உலகம் (பாசம்); நினைவு இல்லாமல் போனால் அந்நிலையில் நிருவிகற்பம் உயிர் (பசு); நினைவு இல்லாமல் போனால் அந்நிலையில் நிருவிகற்பம் இறை. (பதி) 6

**இம்முடி புணர்ந்திடா திடும்வழக் கிழிவழக்**
**கிம்மகி கழுத்தியி லிருந்துமுண் மறைதல்போல்**
**அம்மதி நிலைக்கணு மெனத்தெளி யகத்துளே.**

இம்முடிபு உணர்ந்திடாது இடும் வழக்கு இழி வழக்கு
இம்மகி சுழுத்தியில் இருந்தும் உள் மறைதல் போல்
அம்மதி நிலைக்கணும் எனத்தெளி அகத்து உளே.

இந்த முடிவை அறிந்திடாமல் கூறும் வழக்குக் கீழான வழக்கு ஆகும்; இவ்வுலகம் உறக்கத்தில் இருந்தாலும் உறங்குவோருக்குத் தெரியாமல் உள்ளே மறைந்துவிடுவது போல், அந்த அறிவு நிலையிலும் அவ்வாறே மறைந்துவிடும் என உன் மனத்துள் தெளிவாக உணர்வாயாக. 7

**ஆதலா லகிலமோ டுயிர்பரம் பொய்யெனா**
**ஓதலும் பதிபசு பாசமங் குண்டெனாப்**
**போதசித் தாந்தநூல் புகறலு மிணங்குமே.**

ஆதலால் அகிலமொடு உயிர் பரம் பொய் எனா
ஓதலும் பதி பசு பாசம் அங்கு உண்டு எனாப்
போத சித்தாந்த நூல் புகல்தலும் இணங்குமே.

ஆதலால், உலகுடன் உயிர், இறை, பொய் எனக் கூறும் வேதாந்தக் கருத்தும், பதி, பசு, பாசும் என்றும் உண்டு பொய்யன்று எனக்கூறும் அறிவு நூல்களான சித்தாந்த நூல்கள் கருத்தும் இசைவுடையனவே ஆகும். 8

**அழுக்ககன் றோர்சிவ மடைந்திடா வுயிர்களை**
**விழுப்பொரு ளெனச்சொலல் விகற்பிலும் விகற்பென**
**வழுத்திட வயிர்ப்பிலை மதித்துநில் லுள்ளமே.**

அழுக்கு அகன்று ஓர் சிவம் அடைந்திடா உயிர்களை
விழுப்பொருள் எனச்சொலல் விகற்பிலும் விகற்பு என
வழுத்திட உயிர்ப்புஇலை மதித்துநில் உள்ளமே.

மலம் அகன்று சிவத்தை அடைந்திடாத உயிர்களைச் சிவத்துக்குச் சமமான செம்பொருள் எனச் சொல்லுதல்; பிழையினும் பிழையாகும்; அதனைக் கூறப் பிராணன் இல்லை; மனமே நீ மதித்து நிற்பாயாக. 9

**கனலிகண் ணிழல்கொளல் கடுப்பமுக் கட்டையும்**
**நினைவையும் விழுங்கியே நிருவிகற் பப்பலன்**
**தனையிடற் கருணையன் சாமிதா ணம்பிடே.**

கனலி கண் நிழல் கொளல் கடுப்ப முக்கட்டையும்
நினைவையும் விழுங்கியே நிருவிகற்பப் பலன்
தனைஇடற்கு அருணையன் சாமி தாள் நம்பிடே.

சூரிய ஒளி கண்ணொளியைக் கொள்வதைப் போன்று, ஆணவம், கன்மம், மாயை எனும் முப்பாசத்தையும், மனத்தையும் விழுங்கி, நிருவிகற்ப சமாதியின் பலனைப் பெருமான் கொடுத்ததற்கு, அருணகிரிநாதரின் குருவான சாமிநாதன் திருவடிகளை நம்புவாயாக. 10